வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 1771 / ஆ4 / 2021 நாள் 08-06-2021

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2021–2022ம் கல்வியாண்டிற்கு 11ம் வகுப்பு மாணவர்கள் சேர்க்கை சார்பான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் சார்பு. |
| பார்வை | 1. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் டபிள்யு பி எண் 7299 2021 மீதான தீர்ப்பு நாள் 22–03–2021<br>2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் நக. எண் 34462 / பிடி1 / இ1 / 2021 நாள் 07–06–2021 |

•••••

2021-2022 ம் கல்வியாண்டிற்கான பதினோன்றாம் வகுப்பு மாணவர் சேர்க்கை சார்ந்து பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகள் பார்வை 2ல் காணும் பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி 11ம் வகுப்பிற்கு மாணவர்கள் சேர்க்கை செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. பார்வை 1ல் காணும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கில், தனியார் சுயநிதிப் பள்ளிகளில் பனினொன்றாம் வகுப்பில் மாணவர் சேர்க்கை தொடர்பான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
2. தற்போது அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் மேல்நிலைப் பிரிவுகளில் ஏற்கெனவே சேர்க்கை அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டு, மாணவர்கள் சேர விருப்பம் தெரிவிக்கும் நிலையில் அவர்களது விருப்பத்திற்கேற்றபடி பாடப்பிரிவுகளை ஒதுக்கீடு செய்யலாம்.
3. அரசு மற்றும் உதவிபெறும் பள்ளிகளில் அனுமிதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு மேல் மாணவர்கள் சேர்க்கை கோரும் நிலையில் கோவிட் 19 பெரும்தொற்று காரணமாக ஒவ்வொரு பிரிவிலும் 10 முதல் 15 சதவிகிதிம் கூடுதலாக மாணவர்களை சேர்த்திடலாம்.
4. மிக அதிகப்படியான விண்ணபங்கள் எந்த பிரிவுகளுக்கு வரப்பெறுகிறதோ, அச்சூழ்நிலையில் அதற்கென விண்ணப்பித்த மாணவர்களுக்கு அப்பிரிவோடு தொடர்புடைய கீழ்நிலை வகுப்பு பாடங்களிலிருந்து 50 வினாக்கள் (கொள்குறிவகை) அந்தந்த பள்ளி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டு, மாணவர்களக்கு வழங்கி, அவற்றில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் பிரிவுகளை ஒதுக்கீடு செய்யலாம்.
5. பனினொன்றாம் வகுப்பில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு ஜுன் 3வது வாரத்திலிருந்து அப்போது கோவிட் பெருந்தொற்று குறித்த அரசின் வழிகாட்டுதல் அடிப்படையில் வகுப்புகளைத் துவங்கலாம்.

6. 2021–2022ம் கல்வியாண்டில் பன்னிரெண்டாம் வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு தொடர்ந்து கல்வி தொலைக்காட்சி உயர்தொழில்நுட்ப ஆய்வகம் மற்றும் தொலைத் தொடர்பு முறைகளில் பாடங்களை நடத்த ஆரம்பிக்கலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல் அடிப்படையில் பதினோன்றாம் வகுப்பு மாணவர் சேர்கையினை நடத்திட எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் செயல்படுமாறும், கொரன தொற்றுநோய் பரவாமல் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுமாறும் அனைத்து அரசு / நகரவை / ஆதிதிராவிட / நிதியுதவி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்
1. பள்ளிக் கல்வி ஆணையர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.